தமிழ்நாடுதகவல்ஆணையம்
எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-2951559


**ஆணைநாள் 07.07.2026**

**முன்னிலை**
**திரு அ. விஜயராம், எம்.ஏ., பி.எல்.,**
**மாநிலதகவல்ஆணையர்**

*****

**வழக்குஎண். SA 12251/H/2024**

M. செல்வம் மீரான் — மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
சார் ஆட்சியரின் நேர்முக உதவியாளர் — பொது அதிகார அமைப்பு
சார் ஆட்சியர் அலுவலகம்
பொன்னேரி
திருவள்ளூர் மாவட்டம்

கோரிய தகவல்: மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 10.04.2024 அன்று தாக்கல் செய்துள்ள மனுவில் 19.04.2024 அன்று நடைபெற இருந்த நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்பட்டு விடக்கூடாது என்ற காரணத்தால் சட்டத்திற்கு புறம்பமாக எந்த ஒரு பிரச்சனையிலும் ஈடுபடாத நிலையில் வலுக்கட்டாயமாக பிரிவு 107-ன் கீழ் கடந்த 30.03.2024 அன்று கையொப்பம் பெறப்பட்டது சம்பந்தமாக 3 இனங்களுக்கு தகவல்கள் வேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். பொது தகவல் அலுவலரால் தகவல்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து மேல்முறையீட்டாளரால் 11.07.2024 அன்று தாக்கல் செய்யப்பட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவானது இன்று (07.07.2026) இவ்வாணையத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | திரு M. செல்வம் மீரான் அவர்கள் விசாரணைக்கு நேரில் ஆஜரானார். |
| பொது அதிகார அமைப்பு | பொது தகவல் அலுவலர் திரு செல்வகுமார், சார் ஆட்சியரின் நேர்முக உதவியாளர், சார் ஆட்சியர் அலுவலகம், பொன்னேரி அவர்கள் விசாரணைக்கு நேரில் ஆஜரானார். |

**ஆணை**

இன்றைய (07.07.2026) விசாரணையின்போது ஆஜரான பொது தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளர் குறிப்பிட்டுள்ள இனங்களுக்கு 22.01.2026 தேதியிட்ட கடிதம் வாயிலாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்து அதற்குண்டான ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

2. இன்றைய விசாரணையின் முடிவில் இவ்வாணையத்தால் கீழ்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

- பொது தகவல் அலுவலர் 19 மாதங்கள் கடந்து காலதாமதமாக தகவல்கள் வழங்கியிருந்தபோதிலும், மனுதாரர் கோரியிருந்த அனைத்து இனங்களுக்கும் முழுமையான தகவல்களை வழங்கியுள்ளதை இவ்வாணையம் பதிவு செய்கிறது. மேலும், சட்டப்பிரிவு 7ன்படி மனுதாரரின் சட்டப்பிரிவு 6(1)ன் கீழ் விண்ணப்பத்தை பெற்ற பொது தகவல் அலுவலர் அவர்கள் 30 தினங்களுக்குள் மனுதாரர் கேட்டுள்ள தகவல்களை முழுமையாக தரக் கடமைப்பட்டவராவார். இந்நிலையில் அப்போதைய பொது தகவல் அலுவலர் ஏன் 30 தினங்களுக்குள் தகவலை மனுதாரருக்கு வழங்க தவறினார் என்பதற்கும், காலதாமதமாக தகவல் ஏன் அளிக்கப்பட்டது என்பதற்கும் அப்போதைய பொது தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 20(1)ன்கீழ் அதிகபட்ச தண்டமாக ரூ.25,000/- ஏன் விதிக்கக் கூடாது என்பதற்கும் அவரது எழுத்து மூலமான விளக்கங்களை அவரிடமிருந்து பெற்று இவ்வாணையத்திற்கு 04.08.2026 அன்று நேரிடையாக சமர்ப்பிக்குமாறு இன்றைய பொது தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்திரவிடுகிறது.
- தவறும் பட்சத்தில் முன்னாள்/இந்நாள் பொதுத் தகவல் அலுவலர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 சட்டப்பிரிவு 20(1)-ன் கீழ் ரூ.25,000/- அபராதம் விதிக்கவும், சட்டப்பிரிவு 20(2)-ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் மற்றும் 19(8)(b)-ன்படி மேல்முறையீட்டு இழப்பீடு வழங்குதல் போன்ற தண்டனை நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கவும் நேரிடும் என்று பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.
- மேலும், தகவல்களை பொறுத்த மட்டில், பொது தகவல் அலுவலர் அவர்களால் மேல்முறையீட்டாளருக்கு போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதை இவ்வாணையம் பதிவு செய்து இவ்வழக்கு முற்றாக்கம் செய்யப்படுகிறது.

ஒம்/- (அ. விஜயராம்)
மாநில தகவல் ஆணையர்

//ஆணையத்தின் ஆணைப்படி//

உதவிப் பதிவாளர்

<u>வழக்குஎண். SA 12251/H/2024</u>

<u>பெறுநர்</u>

<u>பொது அதிகார அமைப்பு</u>

பொதுத் தகவல் அலுவலர் /
சார் ஆட்சியரின் நேர்முக உதவியாளர்
சார் ஆட்சியர் அலுவலகம்
பொன்னேரி
திருவள்ளூர் மாவட்டம்

<u>மேல்முறையீட்டாளர்</u>

M. செல்வம் மீரான்
4/287, பெருமாள் கோவில் தெரு
கண்ணம்பாளையம்
விளாங்காடுபாக்கம் (அஞ்சல்)
சென்னை - 600 052

Copy to : Judgement file
MB/PS